நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026-ம் வருடம் மார்ச் திங்கள் 5-ம் நாள் வியாழக்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.222/2026
CNR.No.TNTS02-0000707-2026
IN
குற்ற எண்.519/2025

சேர்மன்,
த/பெ.கருணாகரன் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
பாவூர்சத்திரம் காவல் நிலையம். ... புகார்தாரர்/எதிர்மனுதாரர்

இம்மனுவானது இன்று விசாரணைக்காக வரப்பெற்று மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.வினித்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 தென்காசி அவர்கள் ஆஜராகியும் வரப்பெற்ற இம்மனுவில் இரு தரப்பையும் கேட்டு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## <u>உத்தரவு</u>

1. <u>மனுவின் சுருக்கம்</u> –

மனுதாரர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் என்றும், குற்ற எண்.519/2025 ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 16.02.2025 அன்று கூறப்படும் சம்பவம் தொடர்பாக பாவூர்சத்திரம் காவல் துறையினரால் வாகனம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும், காவல் துறைனரால் சொத்து எண் வழங்கப்பட்டு காவல் நிலைய பாதுகாப்பில் தற்போது இருந்து வருகிறது என்றும், பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் நீண்ட நாட்களாக காவல் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் வாகனம் சேதமடையும் வாய்ப்பு உள்ளது என்றும், இந்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வாகனம் தனக்கு மீள வழங்கப்படும் பட்சத்தில் வாகனம் பெற்ற நாளிலிருந்து ஒரு மாத்திற்குள் வாகனத்தின் உரிமையாளர் பெயரை முந்தைய உரிமையாளரிடமிருந்து தனது பெயருக்கு மாற்றம் செய்து (RC Transfer) முடிப்பேன் என்றும், உரிமையாளர் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்பு, தனது பெயரில் மாற்றம் செய்யப்பட்ட அசல் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில்

சமர்ப்பிப்பேன் என்றும், மேலும், இந்நீதிமன்றம் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைகளையும் பின்பற்ற தயாராக இருப்பதாகவும், எனவே, TN 76 Q 6472 பயணிகள் ஆட்டோ வாகனத்தை மனுதாரரிடம் தற்காலிகமாக ஒப்படைக்க உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்</u> –**

அரசு தரப்பில், வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 76 Q 6472 என்ற பதிவெண் கொண்ட பயணிகள் ஆட்டோ P.R.No.20/2026 பிரகாரம் பெறப்பட்டு பாவூர்சத்திரம் காவல் நிலைய பொறுப்பில் பாதுகாப்பாக உள்ளது என்றும், மேற்படி ஆட்டோவினை தன்னிடம் ஒப்படைக்க வேண்டி மனுதாரர் வெண்டியுள்ளார் என்றும், மேற்படி ஆட்டோவிற்கு உரிமையாளர் இல்லை என்றும், மேலும் மனித உயிருக்கு கேடு விளைவிக்கும் புகையிலையினை பயணிகள் ஆட்டோவில் கடத்தியுள்ளார் என்றும், மேலும் ஆட்டோவிற்கு உரிமையாளர் அல்லாத மனுதாரரிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் மீண்டும் இது போன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்றும், ஆட்டோவினை வேறு நபரிடம் விற்கவோ, உருக்குலைக்கவோ வாய்ப்புள்ளதால் மேற்படி உரிமையாளர் அல்லாத மனுதாரரிடம் ஆட்டோவினை ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>3. தீர்வு</u> –**

வழக்கு ஆவணங்களைப் பரிசீலிக்கும் போது, மனுதாரர் இவ்வழக்கின் 1ம் எதிரி ஆவார். இந்த வழக்கானது u/s. 123 BNS and 24(1) COTPA Act–ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட சொத்தான TN76Q6472 என்ற பதிவெண் கொண்ட பயணிகள் ஆட்டோ (Passenger Auto) பி.ஆர்.எண்.20/2026 பிரகாரம் பெறப்பட்டு நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் நகலில் வாகனத்தின் உரிமையாளர் பெயர் அசரப் என்று உள்ள நிலையில், மேற்படி வாகனத்தின் உரிமையாளர் அசரப் என்பவர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி 23.02.2026 அன்று தாக்கல் செய்த உறுதிமொழி ஆவணத்தில் இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தின் உண்மையான உரிமையாளர் தான் என்றும், இவ்வழக்கில் தொடர்புடைய அந்த வாகனத்தை குற்றச்சம்பவம் நடைபெறும் முன்னரே இவ்வழக்கில் குற்றம்

சாட்டப்பட்டவரான சேர்மன் என்பவருக்கு விற்று விட்டேன் என்றும், மேற்படி வாகனத்தை விற்பனை செய்யும்போது வாகனத்தின் பெயர் மாற்றம் ( RC Tranfer) செய்வதற்காக தேவையான அனைத்து ஆவணங்களிலும் நான் முழுமையாக கையொப்பமிட்டு அவரிடம் வழங்கிவிட்டேன் என்றும், இவ்வழக்கில் பறிமுதல் செய்யப்பட்டுள்ள அந்த வாகனத்தை குற்றம் சாட்டப்பட்ட சேர்மன் என்பவருக்கு திரும்ப ஒப்படைப்பதில் தனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை என்று கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மேலும் மேற்படி வாகனத்தை தொடர்ந்து இயக்காவிட்டால் அதன் உதிரி பாகங்கள் சேதமடைந்துவிடும் என்பது தெரிய வரும் நிலையிலும், தக்க ஜாமீன்தாரர் அடிப்படையில் மனுதாரரின் மேற்படி பொருளை மனுதாரரிடம் இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது. எனவே, மாண்புமிகு உச்சநீதிமன்றம் வழங்கிய ***Sunderbhai Ambalal Desai Vs. State of Gujarat*** உத்தரவின்படியும், மனுதாரர் வசம் அவர் மனுவில் கோரியுள்ள மேற்படி மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மேற்படி பி.ஆர்.எண்.20/2026–ல் தாக்கலான வழக்கு சொத்தான TN76Q6472 என்ற பதிவெண் கொண்ட பயணிகள் ஆட்டோ (Passenger Auto) ஒன்று மனுதாரருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இடைக்காலமாக திருப்பிக் கொடுக்க உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>** :–

1. மனுதாரர் ரூ.2,00,000/–க்கு தான் சொந்த பிணையமும், மேலும், இரு நபர் பிணைப் பத்திரமும் எழுதிதர வேண்டும்.
2. வழக்குச் சொத்தினை 4 கோணங்களில் புடைப்படம் எடுத்து, குறுந்தகடுடன் தாக்கல் செய்ய வேண்டும்.
3. நீதிமன்றம் வேண்டும் போதும், விசாரணையின் போதும் மேற்படி சொத்தினை ஆஜர்படுத்த வேண்டும்.
4. வழக்குச் சொத்தினை குற்ற செயலுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.
5. மேற்படி வழக்குச் சொத்தினை **Judicial form No.82 in order to Rule 257(1) of criminal rules of practice 2019** ன் படி பஞ்சநாமா தயார் செய்து இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

6.மேற்படி வாகனத்தை இந்நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றப்பின் ஒரு மாதக்காலத்திற்குள் ஆர்.சி புத்தகத்தில் பெயர் மாற்றம் செய்து நீதிமன்றத்தில் காண்பித்து செல்லவேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026-ம் வருடம் மார்ச் திங்கள் 5-ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

S MUTHU LAKSHMI

Digitally signed by S MUTHU LAKSHMI
Date: 2026.03.05 16:00:28 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.